# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 195/மா/2017

ஆணை எண். 303/2017

நாள் : 26/12/2017

திரு பெ. முருகேசன்,
தஞ்சாவூர் – 613 205. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
வருவாய் அதிகாரிகள்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர். – எதிர் மனுதாரர்கள்

தஞ்சாவூர் மாநகராட்சி, மணக்கரம்பை, எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு முகவரியில் வசிக்கும் திரு பெ. முருகேசன் அவர்களது 03.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 05.10.2017 அன்று பெறப்பட்டு, 195/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சி, மணக்கரம்பை, எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு முகவரியில் வசிக்கும் திரு பெ. முருகேசன் என்பவர் 03.10.2017 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் தஞ்சாவூர் நகர அளவை எண்.1884–க்கு சொத்துவரி பெயர்மாற்றம் செய்து தரவேண்டி மாநகராட்சிக்கு பல மனுக்கள் அளித்தும் இதுவரை சொத்துவரி பெயர் மாற்றம் செய்து தரப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தனது முறையீட்டு மனுவுடன் பிற அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட / பெறப்பட்ட கடித நகல்களை மட்டுமே சமர்ப்பித்துள்ளார். தஞ்சாவூர் மாநகராட்சி நகர நில அளவை எண். 1884, எந்த வகையில் தனக்குப் பாத்தியப்பட்டது என்று உறுதி செய்யும் ஆவண நகல்களை தாக்கல் செய்யவில்லை. மேலும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தாக்கல் செய்த 09.11.2017 நாளிட்ட வில்லங்க சான்றிதழ் எண்.5061–ன் படி, மனுதாரர் குறிப்பிடும் 1884 நில அளவை எண்ணுள்ள நிலம், 14.06.1993 நாளிட்ட ஆவண எண்.1329 மூலம் திருமதி ஞானமிர்தம் என்பவர் பெயரில் விற்பனைக் கிரயம் செய்து தரப்பட்டுள்ளது என அறிய முடிகிறது. முறையீட்டு மனுதாரருக்கும், மேற்படி நிலத்தினை கிரயம் பெற்ற திருமதி ஞானமிர்தம் என்பவருக்கும் அந்நிலத்தின் மீதான உரிமை குறித்து தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் L.A.O.P.No.11/2014 எண்ணிட்ட வழக்கும் நிலுவையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர் நில உடமை குறித்த ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். மேற்படி நிலம் சம்பந்தமாக தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதையும் மறைத்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். இந்நிலையில், பிரதிபலனை எதிர்பார்த்தே மாநகராட்சி அலுவலர்கள் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யவில்லை என்ற மனுதாரரின் கூற்று ஏற்புடையதாக இல்லை. மேலும், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) –இல் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் இயலாது. எனவே, மனுதாரரின் முறையீட்டினை ஏற்க இயலாது எனத் தெரிவித்து, 20.08.2018 அன்று மனுதாரரிடம் மேற்கொள்ளப்படவிருந்த விசாரணையையும் இரத்து செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு எண். L.A.O.P.No.11/2014-இல் தீர்ப்பு பெற்றபின், தேவைப்படின் மாநகராட்சி ஆணையருக்கு முறையாக உரிய ஆவணங்களுடன் சொத்துவரி பெயர் மாற்றம் கோரி முறையீடு செய்தால் மாநகராட்சி விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

டி. பழனிவேல்
செயலாளருக்காக
ஒப்ப
27/12/17

பெறுநர்

1. திரு பெ. முருகேசன்,
2/705, வடக்கு வெள்ளாளர் தெரு,
மனக்கரம்பை,
தஞ்சாவூர் – 613 205.

2. மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகன்